**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 65 /2022</u>**

பெயர் : ரெத்தினகுமார் P.W.1.

த/பெ. : கணேசன்

தேதி : 24.04.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை:</u> –**

நான் யாரிடமிருந்து கிரய சொத்தை கிரயம் பெற்றேன் என்றால் ஜானகி என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். ஜானகி என்பவர் தன்ராஜ் எனபவரிடமிருந்து கிரயம் பெற்றார். தன்ராஜ் என்பவர் ஜெயராமன் என்பவரிடமிருந்தும், விஜயராணி என்பவரிடமிருந்தும் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். நான்கிரயம் பெற்ற கிரய ஆவணத்தின் அசலை தாக்கல் செய்யாமல் சான்றிட்ட நகலை தான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படாததற்கான காரணத்தை வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். எனது ஆவணத்திற்கு மூல ஆவணம் ஜானகி என்பவருக்கு தன்ராஜ் எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் தான் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அதன் அசல் ஆவணம் தாக்கல் செய்யப்படாததற்கான காரணத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே தாவா சொத்து ஆரம்ப காலத்தில் சாமிதுரை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சாமித்துரைக்கு தட்சிணாமூர்த்தி, ஜெயராமன், பாலசுந்தரம் என்ற 3 மகன்கள் உள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தன்ராஜ் பெயரில் உள்ள கிரய ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணம் தன்ராஜ் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் என்றால் சரிதான். அந்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாமித்துரைக்கு 3 மகன்கள் உள்ள நிலையில் சாமித்துரையின் 2 வது மகன் ஜெயராமன், 3 வது மகன் பாலசுந்தரத்தின் மனைவி விஜயராணி ஆகியோர் மட்டும் தன்ராஜ் என்பவருக்கு கிரய ஆவணம் ஏற்படுத்தியுள்ளதால் அந்த ஆவணம் செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 மற்றும் வா.சா.ஆ.2 ன் மூலம் தான் நான் தாவா சொத்தை உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து 3 புல எண்களில் 1999 சதுர மீட்டர் என குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்ற அடிப்படையில் தான் நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருகிறேன் என்றால் சரிதான். தன்ராஜ் என்பவருக்கு ஏற்பட்ட ஆவணம் குறைபாடுடைய ஆவணம் என்பதால் அந்த ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்ட மற்ற கிரய ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தெட்சிணாமூர்த்தி என்பவரின் மகள்கள் தான் பிரதிவாதிகள் என்ற விபரம் தெரிந்து தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் தான் அவ்வாறு கூறி தாவா சொத்தில் உரிமை கோரினார்கள். அதனால் நான் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். எனது தகப்பனார் கணேசன் தில்லையாடியில் வசித்து வந்தார் என்றால் சரிதான். ராமச்சந்திரன் என்பவர் எனது கிரய முன்னவரான ஜானகியின் கணவராவார். 1ம் பிரதிவாதி எனது தகப்பனார் கணேசன், தன்ராஜ் மற்றும் ஜானகியின் கணவர் ராமச்சந்திரன் ஆகியோர்களுக்கு எதிராக பொறையார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அதேபோல் நானும் பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். இரண்டு புகார்கள் மீதும் இருதரப்பினர்களையும் அழைத்து பொறையார் காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். சட்டத்திற்கு புறம்பாக தாவா சொத்திற்கான பட்டா மாற்றப்பட்டுள்ளது என கூறி 1ம் பிரதிவாதி மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்திற்கு மேல்புறமும் தென்புறமும் தார் சாலை உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் 1/3 பாகம் தெட்சிணாமூர்த்திக்கு உரிமையானது என்றாலும் தெட்சிணாமூர்த்தி உயிருடன் இருந்த போது சாமித்துரையின் மகன்கள் மூவரும் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டு அவரவர்களது பாகத்தை தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மேல்புறம் தெட்சிணாமூர்த்தி என்பவருக்கு ஒதுக்கப்பட்டு அவர் அனுபவித்து வந்து அவருக்கு பிறகு பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு உரிமையுடைய சொத்துகளையும் சேர்த்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது பூர்வீக சொத்துகள் தில்லையாடி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்துகளையும் பூர்வீக சொத்துகளையும் விக்டோரியா என்பவர் மூலம் நான் பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். விக்டோரியா என்பவரது பெயரை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தேவைப்படும் போது வெவ்வேறு ஆட்களை வைத்து பராமரித்து வருவேன். அந்த நபர்களின் பெயரை

குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் இயலாது. இந்த வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிப்பத்தற்கு விக்டோரியா, ஜானகி, தன்ராஜ், ராமச்சந்திரன் ஆகியோர் சாட்சியம் அளிக்க வருவார்களா என்றால் வருவார்கள்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.